StudentBounty.com

10

Register Number | | | | | | |

## பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக : 4 × 2 = 8

1. அகநானூறு எத்தனை பகுதிகளாக உள்ளது ? எழுதுக.
2. அறிவுடையார், அறிவிலார் இயல்பினைச் சுட்டுக.
3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை ?
4. அந்தாதி - விளக்குக.
5. வேற்றுமையைத் தகர்த்தெரியும் வழிகளாக ஆலந்தூர் மோகனரங்கன் கூறுவன யாவை ?
6. அறிவார்க்கும் அறிவனாகிய அருகதேவனை நீலகேசி வழிபட்டமை எவ்வாறு ?

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : $3 \times 4 = 12$

7. வரதநஞ்சையப்பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார் ?

8. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழி வரைவு கடாயவாற்றை விளக்குக.

9. பொறையுடைமையின் சிறப்பினை விளக்குக.

10. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை ?

11. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?

III. பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: $3 \times 4 = 12$

12. இராசராச சோழனுலாவில் ஒட்டக்கூத்தர் கூறும் செய்திகளை எழுதுக.

13. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

14. மேகக்கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப்பெறுகின்றன ?

15. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிடுகிறார் ?

16. நயினார் பதத்துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத் தக்கனவாக உமறுப்புலவர் கூறுன யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. $1 \times 8 = 8$

17. 'வினைத்திட்பம்' பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை தொகுத்தெழுதுக.

19. குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறியவாறு

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

V. பின்வரும் செய்யுளின் கீழ், கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக: 4 × 1

20. ''கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்

பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ''

அ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

இ) இது யாரைப் பற்றிக் கூறுகிறது ?

ஈ) கணிச்சி - பொருள் கூறுக.

***அல்லது***

21. ''கடமைபுரிந் தான் இவனே''

அ) இதனைக் கூறியவர் யார் ?

ஆ) யாரிடம் கூறினார் ?

இ) எப்போது கூறினார் ?

ஈ) இவ்வரி இடம்பெற்ற நூலின் பெயர் யாது ?

VI. 22. ''மனிதரெலாம்'' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. ''மறவற்க'' எனத் தொடங்கும் குறளையும், ''தொழில்'' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) வந்தனன் ஆ) ஈன்ற இ) துறவற்க

ஈ) அறைதல் உ) குனிந்து ஊ) புனைந்தோம்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



25. எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. $3 \times 2$

அ) நெடுந்தேர் ஆ) மலர்தலும் கூம்பலும்

இ) ஆயிழை ஈ) தழீஇ

உ) மாவலி ஊ) புடை புடை.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. $2 \times 2 = 4$

அ) பெருங்களிறு ஆ) நிறையுடைமை இ) பொற்கொடி

ஈ) நின்னருள் உ) வரகரிசி ஊ) பூஞ்சோலை.

27. சான்று தந்து விளக்குக. $1 \times 4 = 4$

பொருண்மொழிக்காஞ்சி *அல்லது* முல்லைத்திணை.

28. ''இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள் $1 \times 4 = 4$

வன்மை மடவார்ப் பொறை''

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

***அல்லது***

தற்குறிப்பேற்ற அணி *அல்லது* உருவக அணியை விளக்குக.

VIII. பொருத்துக. $4 \times 1 = 4$

| | **திணை** | | **பாடியோர்** |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | — | ஓரம்போகியார் |
| 30. | முல்லை | — | அம்மூவனார் |
| 31. | மருதம் | — | ஓதலாந்தையார் |
| 32. | நெய்தல் | — | கபிலர் |
| | | — | பேயனார். |

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16 × 1

33. 'ஒன்றே என்னின்' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம்

அ) அயோத்தியா காண்டம்

ஆ) சுந்தர காண்டம்

இ) யுத்த காண்டம்.

34. இராமலிங்கனார் எக்கலையில் வல்லவர்

அ) ஓவியக்கலை

ஆ) சிற்பக்கலை

இ) இசைக்கலை.

35. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை

அ) 4 அடி முதல் 8 அடி வரை

ஆ) 9 அடி முதல் 12 அடி வரை

இ) 13 அடி முதல் 31 அடி வரை.

36. 'அஞ்சிலோதி' - இதன் இலக்கணக் குறிப்பு

அ) அன்மொழித்தொகை

ஆ) பண்புத்தொகை

இ) வேற்றுமைத்தொகை.

37. 'பராய்க்கடன்' - என்றால்

அ) வேண்டிக் கொள்ளுதல்

ஆ) விரும்புதல்

இ) வணங்குதல்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



38. திருக்குறள் என்பதில் குறள் என்பது

அ) காரணப்பெயர்

ஆ) சிறப்புப்பெயர்

இ) ஆகுபெயர்.

39. பொறுமைக்கு எடுத்துக்காட்டாக வள்ளுவர் கூறுவது

அ) மரம்

ஆ) தருமர்

இ) நிலம்.

40. சிலப்பதிகாரம் - பொருள் எழுதுக.

அ) சிலம்பால் அதிகரித்த வரலாறு

ஆ) சிலம்பைச் சிறப்பிக்கும் காப்பியம்

இ) சிலம்பு பற்றிய கதை.

41. ஊழ் சூழ்வரி - என்பதில் வரி என்பது

அ) சந்தப்பாடல்

ஆ) நாட்டுப்பாடல்

இ) இசைப்பாடல்.

42. 'மருகி' என்பதன் பொருள்

அ) மகள்

ஆ) மருமகள்

இ) அம்மா.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

43. தேம்பாவணி எத்தனை காண்டங்களை உடையது ?

அ) மூன்று

ஆ) நான்கு

இ) ஐந்து.

44. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்

அ) குயில்

ஆ) மயில்

இ) சிட்டு.

45. 'புலன்' என்னும் இலக்கிய வகை

அ) கலம்பகம்

ஆ) பள்ளு

இ) உலா.

46. 'திவ்விய கவி' என்ற பெயரால் அழைக்கப்படுபவர்

அ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) குமரகுருபரர்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

47. தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வர்த்' எனப் பாராட்டப் பட்டவர்

அ) வாணிதாசன்

ஆ) பாரதிதாசன்

இ) கம்பதாசன்.

48. 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கப்பட்டவர்

அ) அப்பர்

ஆ) மாணிக்கவாசகர்

இ) சுந்தரர்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : **2 + 2 = 4**

49. எந்நன்றி கொன்றார்க்கும் ................ உய்வில்லை

செய்நன்றி கொன்ற ................ .

50. எவ்வ துறைவ ................ முலகத்தோ

டவ்வ துறைவ ................ .

www.StudentBounty.com
Homework Help & Pastpapers
StudentBounty.com